# நாட்டுப்புற ஓவியக்கலையில் பறவைகளை வரையலாமா?



நாட்டுப்புற
ஓவியக்கலையில்
உள்ள சில
வடிவங்களைப்
பாருங்கள்

வணக்கம்
நண்பர்களே!
நான் ஒரு
காட்டு வாலாட்டி



ஓவியம்: அபிஷேகா கிருஷ்ணகோபால்

early bird

கருத்து & வடிவமைப்பு: அபிஷேகா கிருஷ்ணகோபால்

தமிழில்: சு.வே. கணேஷ்வர்

காட்டு வாலாட்டியின் ஓவியத்தை ரசித்தீர்களா? உங்களுடைய காட்டு வாலாட்டியை நீங்களே வரையலாமே!

உதவி வேண்டுமா?

• தரப்பட்டுள்ள ஓவிய வடிவங்களைப் பாருங்கள்.

• சில வடிவங்களையோ அல்லது அனைத்து வடிவங்களையுமோ பயன்படுத்துங்கள்.

• கீழுள்ள பறவையின் வரைபடத்தில் வடிவங்களை நிரப்புங்கள். உங்களுடைய காட்டு வாலாட்டி தயார்!



இப்போது அடுத்த பக்கத்தில் உள்ள சில கேள்விகளுக்கு விடை கண்டுபிடிப்போமா?

## உங்களுக்குத் தெரியுமா?
## நான் வாலை ஆட்டிக்கொண்டே நடப்பதால் என்னுடைய பெயர் வாலாட்டி!



- என் வாலை எப்படி ஆட்டுவேன் தெரியுமா?

❑ பக்கவாட்டில்
❑ மேலும் கீழுமாக

- நான் என்ன சாப்பிடுவேன் தெரியுமா?

❑ பழங்கள்
❑ பூச்சிகள்
❑ விதைகள்

- நான் எங்கு வசிப்பேன் தெரியுமா?

❑ நீர்நிலைகள்
❑ புல்வெளிகள்
❑ காடுகள்

- என்னை ஆண்டு முழுவதும் இந்தியாவில் பார்க்க முடியுமா?

❑ ஆம் ❑ இல்லை



என்னைப் பற்றிய சுவாரசியமானத் தகவல்களை உங்கள் ஆசிரியரிடம் கேளுங்கள்

## என்னைப் பற்றிய சில சுவாரசியத் தகவல்கள்...

- வாலாட்டிகள் குடும்பத்தில் நான் மட்டுமே வாலை பக்கவாட்டில் ஆட்டிக்கொண்டு நடப்பேன்.
- பெரும்பாலும் காடுகளிலும் காட்டை ஒட்டியத் தோட்டங்களிலும் என்னைப் பார்க்கலாம். வாலை ஆட்டிக்கொண்டே சருகுகளுக்கு இடையே உள்ள பூச்சிகளைத் தேடி உண்பேன்.
- நான் ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவிற்கு வலசை வருவேன். குளிர்காலத்தை தென்னிந்தியாவில் கழிப்பேன்.
- வாலாட்டிகளில் நான் மட்டுமே மரத்தில் கூடுகட்டுவேன்.

